**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 217/2023 P.W. 6/L.W.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. பாலகிருஷ்ணபிள்ளை | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 29.01.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். 14.05.2022 ம் தேதி மதியம் 11.45 மணியளவில் போலீசார் பாம்போடு கால்வாய் அருகே அமைந்துள்ள இசக்கியம்மன் கோவில் முன்பு பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். சம்பவயிடம் குறித்து எழுதி என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டுக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் ஐயப்பன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்கு விசாரணை** :

நான் காவல்துறையில் பணிச்செய்து ஓய்வு பெற்றவன் என்றால் சரிதான். 2014 ம் வருடம் ஓய்வு பெற்றேன். குளச்சல் காவல்நிலையத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். நான் காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றதால் மேற்படி நிலையத்தில் பணிபுரிந்த அனைத்து அதிகாரிகளையும் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

2. இசக்கியம்மன்கோவில் ஆலய வளாகத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. சாலையில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். எனக்கு குளச்சலில் உள்ள அனைத்து பகுதிகளையும் தெரியும் என்றால் தெரியாது. என்னுடைய வீட்டிலிருந்து வழக்கின்

சம்பவயிடம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் என் வயலில் இருந்து 500 மீட்டர் தொலைவில் இருக்கும். குளச்சலில் உப்பளம் இருக்கும் இடம் எனக்குத்தெரியும். போலீசார் வந்து விசாரித்த இடத்திற்கும் உப்பளத்திற்கும் இடையே சுமார் 2 கி.மீ தொலைவு இருக்கும் என்றால் இல்லை, 1 கி.மீ தொலைவு இருக்கும்.

3. நான் காவல்துறையில் பணிபுரிந்ததால் எனக்கு தெரிந்த காவலர்கள் என் வீட்டில் வந்து கையொப்பம் பெற்றார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.